**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1**

**இராமநாதபுரம்.**

**முன்னிலை :** திரு.ஜெ.ஹரிஹரசுதன். B.A., LLB., (Hons)
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16-ம் நாள் செவ்வாய்கிழமை

**Crl. M. P. No.619/2026**

**CNR NO. TNRM 02-001803-2026**

சங்கீதா,
க/பெ. சுரேஷ்.

. . . மனுதாரர்

// எதிர் //

காவல்நிலைய பொறுப்பு அதிகாரி,
பஜார் காவல் நிலையம்,
குற்ற எண். 110/2026
U/Sec. 296(b), 115(2), 318(4) BNS

. . . எதிர்மனுதாரர்

இம்மனுவானது 12.06.2026 அன்று தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சரவணக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**உ த் த ர வு**

இம்மனுவானது பிரிவு 497 & 503 of BNSS ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள TN 65 AT 1449 என்ற பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தை எதிர்மனுதாரர் காவல்நிலையம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் பின்னர் அந்த வாகனத்தை மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கவும் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு ஆவணங்கள் மற்றும் போலீசாரின் பதிலை பரிசீலனை செய்யும்போது இந்த வழக்கில் கடந்த 06.03.2026 ம் தேதி சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 318(4) BNS ன் கீழ் குற்றத்தை செய்வதற்காக சட்டவிரோதமாக மனுதாரர் தனது வாகனத்தை பயன்படுத்திய குற்றத்திற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டு TN 65 AT 1449 என்ற பதிவெண் கொண்ட Swiffy கார் வாகனம் போலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், அது நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படாமல் உள்ளது என்றும் தெரிய வருகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர்தான் மேற்படி வாகனத்தின் உரிமையாளர் என்று தெரிவித்து, மேற்படி வாகனத்தின் உரிமை ஆவணத்தின் நகலையும், மனுதாரரின் ஆதார் அட்டை நகலையும் தாக்கல் செய்துள்ளார். மனு அனுமதிக்கப்படவில்லை என்றால் மனுதாரருக்கு மிகுந்த கஸ்டமும் நஸ்டமும் உண்டாகும் என்றும், வாகனமானது வெயிலிலும், மழையிலும் நின்றிருந்தால் அது பழுதடைந்து பயன்பாடு குறையுமென்றும், மனுதாரர் நீதிமன்றம் விதிக்கும் கட்டளைகளை பின்பற்றுவார் என்றும், வாதிட்டார். அரசு தரப்பில் வழக்கின் சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைத்தால் சொத்தை உருமாற்றி அழிக்கக்கூடும் என்றும், மீண்டும் இதுபோன்ற குற்றச்செயல்களுக்கு பயன்படுத்தக்கூடும் என்றும், எனவே வழக்கின் சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

2. வழக்கு கோப்புகளையும், அரசு தரப்பு பதிலையும் பார்க்கும்போது இந்த வழக்கில் மனுதாரர் எதிரி இல்லை என்பதை காணமுடிகிறது. மேலும் அரசு தரப்பு பதிலிலிருந்து மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நான்குசக்கரவாகனம் கைப்பற்றப்பட்டு போலீசார் வசம்தான் உள்ளது என்பதை காணமுடிகிறது. மனுதாரர் தரப்பு ஆவணங்களிலிருந்து மனுவில் குறிப்பிட்டுள்ள வாகனமானது மனுதாரர் பெயரில்தான் உள்ளது என்பதை அறியமுடிகிறது. அரசு தரப்பு பதிலிலிருந்து மனுதாரர்தான் மனுவில் குறிப்பிட்டுள்ள வாகனத்தின் உரிமையாளர் இல்லை என அரசு தரப்பில் தெரிவிக்கவில்லை என்பதையும் காணமுடிகிறது. ஆகவே மேற்படியானவற்றிலிருந்து மனுதாரர்தான் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள வாகனத்தின் உரிமையாளர் என்று முதல் தோற்றமாக தெரிகிறது. எனவே இந்த வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு பார்க்கும்போது

வாகனமானது வழக்கின் விசாரணைக்கு மிகவும் அவசியம் இல்லை என்றும், எனவே தகுந்த நிபந்தனையுடன் மனுதாரரிடம் வாகனத்தை இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பது சரியானதாக இருக்கும் என்றும், இந்த நீதிமன்றம் கருதுகிறது. Sunderbhai Ambalal Desai vs. State of Gujarat, 2002 10 SCC 283 என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை கருத்தில்கொண்டும், மேற்கூறிய காரணங்களை கருத்தில் கொண்டும், இந்த நீதிமன்றம் இந்த மனுவை பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1 | எதிர்மனுதாரர் காவல்நிலையம் மனுவில் குறிப்பிட்டுள்ள வாகனத்தை இந்த நீதிமன்றத்தில் உடனடியாக உரிய படிவத்தின் மூலம் ஒப்படைக்க வேண்டும். |
| 2 | வாகனம் ஒப்படைக்கப்பட்ட பின்பு மனுதாரர் ரூ.5,00,000/- க்கு சொந்த பிணை பத்திரம் எழுதி தரவேண்டும். மேலும் அதே தொகைக்கு இரண்டு தனிநபர்கள் உரிய Solvency ஆவணத்துடன் பிணை பத்திரம் எழுதி தர வேண்டும். |
| 3 | மனுதாரர் தனது ஆதார் அட்டை நகலினையும், குடும்ப அட்டை நகலினையும் தாக்கல் செய்ய வேண்டும், உடன் மனுதாரர் தற்போதைய பாஸ்போர்ட் அளவு புகைப்படமும் தாக்கல் செய்யப்பட வேண்டும். மனுதாரர் இந்த மனுவில் கூறப்பட்டுள்ள வாகனத்தின் ஆர்.சி.புத்தகத்தின் சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். |
| 4 | மனுதாரரிடம் வழக்கு சொத்து ஒப்படைக்கப்படும் முன்பு அவற்றின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அவற்றில் மனுதாரர், இந்த நீதிமன்றத்தில் தலைமை எழுத்தர் ஆகியோர்கள் சான்றொப்பமிட வேண்டும். |
| 5 | மனுதாரர் நீதிமன்றம் வேண்டும்போது, இந்த மனுவினால் கொடுக்கப்பட்ட சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். மேலும் மனுதாரர் இம்மனுவின் மூலம் பெறும் சொத்துக்களை மாற்றி அமைக்காமலும், சேதப்படுத்தாமலும், விற்பனை செய்யாமலும் இருக்க வேண்டும். |
| 6 | இந்த நீதிமன்றத்தின் தலைமை எழுத்தர் பிரிவு 257(1) குற்றவியல் நடைமுறை விதிகளின்படி பஞ்சநாமா தயார் செய்ய வேண்டும். |

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 16-ம் நாள் செவ்வாய்கிழமையாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.16 17:56:01 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.